பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 09 2026** **WEDNESDAY** **6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான ஊதிய உச்சவரம்பை **15** ஆயிரத்திலிருந்து, **25** ஆயிரம் ரூபாயாக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2)** தொழிலாளர்களின் ஓய்வூதிய பாதுகாப்பை வலுப்படுத்த இந்த நடவடிக்கை உதவிடும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3)** மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் **50**-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**4)** டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

**5)** பாங்காக் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆகாஷ் பால் — நித்யா மணி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<>>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான ஊதிய உச்சவரம்பை 15 ஆயிரத்திலிருந்து, 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இதன்மூலம் லட்சக்கணக்கான தொழிலாளர்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியத்தில் இணைக்கப்படுவார்கள் என்று கூறினார்.

இதற்கிடையே, மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு தொழிலாளர்களின் ஓய்வூதிய பாதுகாப்பை வலுப்படுத்திட உதவிடும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை முன்கூட்டியே எட்டுவதற்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மத்திய அமைச்சரவையின் இந்த முடிவின்மூலம், 50 லட்சம் முதல், ஒரு கோடி தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்று சென்னையில் உள்ள மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் திரு விஜய் ஆனந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — விஜய் ஆனந்த் - 45 Sec. )*

<<<<<>>>>>>

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதியில் 30-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்களும், தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் 20-க்கும் மேற்பட்ட வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றின் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.

மனுக்களை விலக்கிக்கொள்ள 19-ஆம் தேதி கடைசிநாளாகும்.

இந்த இரண்டு தொகுதிகளிலும் அடுத்த மாதம் 6-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை 9-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<>>>>>>

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தவெக அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மாநிலத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கூறியுள்ளார்.

இதுவரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு, ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் டெங்கு பரவல் தீவிரமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மாநிலம் முழுவதும் கொசு ஒழிப்புப்பணிகளை தவெக அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்றும், தொடர் மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த தவெக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மக்கள் ஏற்றுக்கொள்ளும் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும்.

தனியார் பேருந்துகளுக்கு கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட ஒன்பது தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 40 Sec. )***

<<<<<>>>>>>

சர்வதேச பின்னலாடை கண்காட்சி இன்று திருப்பூரில் தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த கண்காட்சியில், 50-க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சபரிஷ் — 49 Sec. )***

<<<<<>>>>>>

சாலை பாதுகாப்பை வலியுறுத்தும் உலக சாதனைக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி திருச்செங்கோட்டில் இன்று நடைபெற்றது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஹெல்மட் அணிந்த உருவத்தில் நின்று இந்த சாதனையை படைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — நாமக்கல் கண்ணன் - 39 Sec. )***

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்படாத கனிம வளங்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உரிமம் ரத்து செய்யப்படும் என்று ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் எச்சரித்துள்ளார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பேருந்து நிலையம் அருகே செயல்பட்டுவரும் கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு விற்பனையை ஆட்சியர் திரு பிரதாப் இன்று தொடங்கிவைத்தார்.

---------------------

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் வட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு விஷூ மகாஜன் இன்று ஆய்வு செய்தார்.

----------------------

காஞ்சிபுரம் மாவட்டம் விசூர் ஊராட்சியில் செயல்பட்டுவரும் பாரதியார் உண்டு உறைவிட சிறப்பு பயிற்சிப்பள்ளியில் ஆட்சியர் திருமதி சினேகா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

---------------

திருவாரூர் மாவட்டம் பருத்திக்கோட்டையில் வயல்விழா மற்றும் விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் இன்று நடைபெற்றது.

------------------

வேலூர் மாவட்டத்தில் காவல்துறையினரின் பாதுகாப்புடன் விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன.

------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து விதிமீறல்களுக்கான மின்னணு **Challan** அபராதங்கள் குறித்த

விவரங்களை பொதுமக்கள் எளிதாக அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, 15 இடங்களில் அழைப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

--------------------

சென்னை சென்ட்ரலில் இருந்து ஜோத்பூருக்கு அடுத்த மாதம் 6-ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதிவரை செவ்வாய்க்கிழமை தோறும் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் அடுத்த மாதம் 3-ஆம் தேதி தொடங்கி, நவம்பர் மாதம் 28-ஆம் தேதி வரை சனிக்கிழமை தோறும் இந்த சிறப்பு ரயில் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

பாங்காக்கில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆகாஷ் பால் — நித்யா மணி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணை 10-12, 11-3, 11-5, 11-7 என்ற செட் கணக்கில், கொரியாவின் Jung Daeyong — Kim Eunseo இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஆகாஷ் பாலும், மகளிர் ஒற்றையர் பிரிவில் நித்யா மணியும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

---------------------

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<**END**>>>>>>